## நல்லதும் மாற்றம்தான்! கெட்டதும் மாற்றம்தான்! எதிர்பார்த்து வாக்களித்த

# தமிழ்நாட்டு மக்களுக்குக் கிடைத்ததோ பெருத்த ஏமாற்றம்தான்!

## பேரவையில் நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் குற்றச்சாட்டு!

**சென்னை, ஆக.13-**

**சட்டப் பேரவையில் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் "நல்லதும் மாற்றம்தான்", கெட்டதும் மாற்றம்தான். எதிர்பார்த்து வாக்களித்த தமிழ்நாட்டு மக்களுக்குக் கிடைத்ததோ பெருத்த ஏமாற்றம்தான்'' என்று கூறினார்.**

சட்டப் பேரவையில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் பேசியதாவது:-

இங்கே அமர்ந்திருக்கின்ற சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எங்களின் பேச்சுக்களை கேட்டு ரசிக்க மாடத்தில் வந்து அமர்ந்திருக்கும் பார்வையாளர்களுக்கும் முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு எனது உரையைத் தொடங்குகிறேன்.

இந்த சட்டமன்றம் எத்தனையோ வித்தியசமான சூழல்களைக் கண்டிருக்கிறது. ஆனால், இந்த அரசு ஏற்படுத்தியிருக்கும் சூழல் என்பது வித்தியா சத்திலேயே வித்தியாசமானது.

"செய்வதை மட்டும்தான் சொல்வோம்" என்று ஆணித்தரமாக அள்ளித் தெளித்த வாக்குறுதிகளைத் தாங்களும் மறந்து - மக்களும் மறந்திருப்பார்கள் என்றெண்ணி, தனது முதல் நிதிநிலை அறிக்கையையும் - வேளாண் நிதி நிலை அறிக்கையும் தாக்கல் செய்துள்ளது இந்த அரசு.

அதிலும், பெயர் மாற்றப் பட்டியல் போல் வெளியான இந்த நிதிநிலை அறிக்கை, தேர்தலின்போது சொன்ன "கஜானா காலி" என்ற பிரச்சாரத்தைக் கேள்விக்குறியாக்கிவிட்டது. இதைப் பார்த்து ஆச்சரியக்குறிகள்கூட விக்கித்து நிற்கிறது.

### ஏமாற்றத்தின் வடிவமான நிதிநிலை அறிக்கை!

இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றப் பின் அரங்கேறிய காட்சிகளைத் திரும்பிப் பார்க்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள் துறை ரீதியான ஆய்வுகளை மேற்கொண்டார். பட்ஜெட்டுக்கு முன்னதாக மீண்டும் ஆய்வு செய்தார். அமைச்சரவைக் கூட்டம் நடந்தது. அதில், தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்ட வாக்குறுதிகளுக்கான செயல்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது என்று செய்தி வெளியானது. அதற்கு "வெற்றித் தமிழகத் திட்டங்கள்" என்றெல்லாம் அலங்காரமாய் பெயர் சூட்டப்பட்டு அறிக்கைகளாக வெளி வந்தது.

ஆனால், இப்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையோ, ஏமாற்றத்தின் வடிவமாக இருக்கிறது. திருப்புகின்ற பக்கமெல்லாம் திராவிட மாடல் அரசின் சாதனைத் திட்டங்கள் தான் ஜொலிக்கிறது. மக்கள் மனதில் நிலைகொண்டுள்ள எங்கள் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் உருவாக்கியத் திட்டங்களே புது உரு கொண்டு நிற்கின்றன. இதில் புதிய அரசின் திட்டங்களைத் தேடுகிறேன்.. தேடுகிறேன்... தேடிக் கொண்டே இருக்கிறேன். தேடுவது எனக்காக அல்ல; மக்களுக்காக! புதிய அரசு அமைந்திருக்கிறது... புதிய திட்டங்கள் வரும் என்று நம்பிய மக்களுக்காக!

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம். பெண்களின் வாழ்வாதரத்துக்கும் சுயமரியாதைக்கும் துணைநின்ற திட்டம். ஆயிரம் கைகள் நீட்டி ஆதவனை மறைக்கலாம் என்று கனவு காண்பது போல், அத்திட்டம் பெயர் மாற்றம் கண்டிருக்கிறது. ஆனால், ஆளும் அரசு தேர்தல் அறிக்கையில் சொன்னபடி, உரிமைத்தொகை உயரவில்லை!

### மகளிர் ஏமாந்து நிற்கின்றனர்!

இனிப்பூட்டும் இன்பச் செய்திகள் வரும்; ஆண்டுக்கு ஆறு கேஸ் சிலிண்டர்கள் வரும் என்று நம்பிய மகளிர், அதுகுறித்த அறிவிப்புகூட வரவில்லை என்று ஏமாந்து நிற்கிறார்கள்.

"கல்வி ஒன்றே யாராலும் திருட முடியாத சொத்து" என்பதை எல்லா தருணங்களிலும் எடுத்துச் சொல்லி, கல்விக்கும் மாணவர்களுக்கும் பொற்காலமாக விளங்கிய திராவிட மாடல் வழங்கிய ஒளியில், இந்த அரசு நடைபோடும் என எதிர்பார்த்தோம். ஆனால், மாணவர்களின் இடைநிற்றலைத் தடுக்க 15 ஆயிரம் ரூபாய் நிதியுதவி என்ற அறிவிப்புக்கான திட்டத்தைக்கூட காணவில்லை!

நாடே திரும்பிப் பார்த்து, பல்வேறு மாநிலங்களும் கைக்கொண்ட திட்டம், விடியல் பயணம்! இதனை விரிவுபடுத்தி, அனைத்து அரசுப் பேருந்துகளிலும் மாநிலம் முழுவதும் எங்கு வேண்டுமானாலும் பயணிக்கலாம் என்ற நிலையை ஏற்படுத்தி, சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள் என மகளிர் நம்பினர். ஆனால் அதிலும் ஏமாற்றம்!

இப்படி, இன்றைய ஆளும் அரசு அள்ளிவீசிய தேர்தல் அறிவிப்புகள் ஒவ்வொன்றையும் தேடித் தேடிக் களைத்துவிட்டனர் மக்கள். அவர்களது வேதனையையும் ஏமாற்றத்தையும்தான் இந்தப் பேரவையில் நான் ஒலித்துக் கொண்டிருக்கிறேன். செய்யாமல் விட்டுவிட்டதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

நல்லதும் மாற்றம்தான். கெட்டதும் மாற்றம்தான். எதிர்பார்த்து வாக்களித்த தமிழ்நாட்டு மக்களுக்குக் கிடைத்துள்ளதோ பெருத்த ஏமாற்றம்தான்! மொத்தத்தில், முதல் நிதிநிலை அறிக்கை என்பது முதல் ஏமாற்றம்தான்!

இந்த முதல் ஏமாற்றத்தை எங்களுக்கு ஏன் தந்தீர்கள் என்று இந்த அரசைப் பார்த்து மகளிரும் இளைஞர்களும் புலம்புகின்றனர்.

### பயிர்க் கடன் தள்ளுபடியிலும் ஏமாற்றம் தான் மிஞ்சியிருக்கிறது!

அவர்களைப் பார்த்து கண்ணீரோடு நிற்கும் விவசாயிகள் தனது ஏமாற்றத்தை வாய்விட்டுச் சொல்ல முடியாமல் தவிக்கிறார்கள்.

எப்படிச் சொல்வார்கள் பாவம்...

காவிரி காய்ந்து கிடக்கிறது.

மேகதாது அணை கட்டியே தீருவோம் என கர்நாடகம் ஒற்றைக் காலில் நிற்கிறது.

இதற்கெல்லாம் தீர்வு காண வேண்டிய அரசோ, பயிர்க்கடன் தள்ளுபடியிலும் சொன்னதைச் செய்யாமல் ஏமாற்றத்தை வழங்கியிருக்கிறது. போதாக் குறைக்கு, நெல் டன்னுக்கு 3,500 ரூபாயும் கரும்புக்கு 4,500 ரூபாயும் குறைந்தபட்ச ஆதார விலை கிடைக்கும் என்று நம்பி ஏமாந்துள்ள நிலையில், தங்களது ஏமாற்றங்களைச் சொல்ல வார்த்தைகளின்றி விவசாயிகள் அழுகின்றனர்.

### காக்கிச்சட்டை அணிந்த காவலர்களுக்கும் ஏமாற்றம்!

காக்கிச்சட்டை அணிந்த காவலர்களோ, தங்களது அடிப்படை சம்பளம் மாதம் 18,200 ரூபாயிலிருந்து 25 ஆயிரம் ரூபாயாக உயரும் என்று நம்பி ஏமாந்து நிற்கின்றனர்.

பட்ஜெட் பக்கங்களை எல்லாம் புரட்டி புரட்டி தேடினாலும் பழைய ஓய்வூதியத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளைக் காணவில்லை என அரசு ஊழியர்கள் ஏமாந்து நிற்கின்றனர்.

5 ஆண்டுகள் பணி முடித்த செவிலியர்கள், தற்காலிக ஆசிரியர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவோம் என நம்பினர். ஆனால், அதற்கான எந்த அறிவிப்பும் வராததால் அவர்களும் ஏமாந்து நிற்கின்றனர்.

மின் கட்டணம் மற்றும் நூல் கட்டண உயர்வு சுமையைத் தாங்க ஒவ்வொரு நெசவாளர் குடும்பத்திற்கும் ஆண்டுக்கு 30 ஆயிரம் ரூபாய் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும் என்ற கவர்ச்சிகரமான வாக்குறுதி தேர்தல் அறிக்கையில் இருக்கிறது. தேர்தல் முடிந்து ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகும், இன்னும் அது தேர்தல் அறிக்கையிலேயே இருக்கிறதே என நெசவாளர்களுக்கும் தங்கள் ஏமாற்றத்தைச் சொல்ல வழியின்றி விழிபிதுங்குகின்றனர்.

இத்தனை ஏமாற்றங்களை இந்த நிதி நிலை அறிக்கை தந்துவிட்டதே என்றெண்ணி வேதனைபடும்படிதான் நிதி நிலை அறிக்கையும் வேளாண் நிதிநிலை அறிக்கையும் இருக்கிறது.

மாநிலத்தை திராவிட மாடல் அரசு கடனில் ஆழ்த்தி விட்டுப் போய்விட்டதாக மேடை தோறும் குற்றம் சாட்டி பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. இன்றைக்கு புதிய அரசின் நிதித்துறை செயலாளர் என்ன சொல்கிறார். "கடன் வாங்காமல் அடுத்த 50 ஆண்டுகளுக்கு யாரும் ஆட்சி முடியாது" என்கிறார். நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், தேர்தல் பிரச்சார மேடைகளில் சாட்டிய குற்றச்சாட்டு, முதல் நிதி நிலை அறிக்கையிலேயே தவறானது என்பது முதலமைச்சருக்கு இந்நேரம் தெரிய வந்திருக்கும்.



இப்போது புதிய அரசின் முதல் திருத்தப்பட்ட நிதி நிலை அறிக்கை 2026 27ல் உள்ள கடன் 10,71,770.34 கோடி ரூபாய். அதாவது மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் நிலுவையில் உள்ள மொத்த கடன் விகிதம் 26.12 சதவீதம். புதிய அரசு பொறுப்பேற்று 93 நாட்கள் ஆகிறது. இந்த திருத்தப்பட்ட நிதி நிலை அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள கடன் 10,98,768 கோடி ரூபாய். அதாவது 27.01 சதவீதம்.

நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், ஒரு அரசு கடன் வாங்காமல் இருக்க முடியாது. ஆனால் கடன்களால் எத்தனை திட்டங்கள் நம் மாநிலத்திற்கு கிடைத்தது. எப்படி பொருளாதார வளர்ச்சிக்கு அந்தக் கடன் துணை நின்றது என்பதைத்தான் பார்க்க வேண்டுமே தவிர, வீணாக கடன் வாங்கி விட்டார்கள், கடன் வாங்கி விட்டார்கள் எனக் கூறி ஒரு பொறுப்பான நிதி மேலாண்மையைச் செய்த எங்கள் முன்னாள் முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களை குறை சொல்லக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன்.

அதுமட்டுமின்றி, கடன் வாங்குவது அரசின் இஷ்டத்திற்கு செய்ய முடியாது. அதற்கும் அரசுக்கு பொறுப்பை நிர்ணயிக்கும் ஒரு சட்டம் இருக்கிறது. அது தான் 2003ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டம். அந்தச் சட்டத்தை மீறி, அந்தச் சட்டம் வகுத்து கொடுத்துள்ள எல்லைக் கோட்டைத் தாண்டி யாரும் கடன் வாங்க முடியாது. இந்த அரசும் வாங்க முடியாது என்பதை மேடைப் பிரச்சாரத்தை முடித்து விட்டு, ஆட்சிப் பொறுப்புக்குவந்துள்ளமுதலமைச்சரும் இந்நேரம் உணர்ந்திருப்பார் என நம்புகிறேன்.

### திராவிட மாடல் ஆட்சியில் நீடித்த வளர்ச்சியை நோக்கிய நிதிநிலை அறிக்கை!

வளர்ச்சி விகிதத்தில் தமிழ்நாட்டை நாட்டின் முன்னணி மாநிலமாக உயர்த்திய கடந்த திராவிட மாடல் அரசின் இடைக்கால நிதிநிலை அறிக்கை, மாநிலத்தின் சொந்த வருவாயை உயர்த்தி, உற்பத்தி முதலீடுகளை அதிகரித்து, நீடித்த வளர்ச்சியை நோக்கிய தெளிவான நிதி அணுகுமுறையை முன் வைத்தது.

ஆனால், தற்போதைய அரசின் திருத்தப்பட்ட நிதிநிலை அறிக்கை அந்தப் பாதையைத் தொடரத் தவறியுள்ளது. உயர வேண்டிய சொந்த வருவாய் குறைந்துள்ளது. மாநிலத்தின் சொந்த வரி வருவாய் கணிப்பு 2,839 கோடி ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது.

அதாவது, "தமிழ்நாட்டை தற்சார்பாக்குவோம்" என்று கூறிய இந்த அரசு, நடைமுறையில் மாநிலத்தின் வருவாய் ஈட்டும் திறனையே பலவீனப்படுத்தியுள்ளது.

இதைவிட கவலையளிப்பது என்னவென்றால், மாநிலத்தின் வரி மற்றும் வரியல்லா வருவாயை உயர்த்துவதற்கான புதிய சிந்தனையோ, புதிய திட்டமோ, புதிய அணுகுமுறையோ இந்த நிதிநிலை அறிக்கையில் எங்கும் காணப்படவில்லை.

வெள்ளை அறிக்கையில், முந்தைய அரசின் வருவாய் திரட்டும் திறனை கடுமையாக விமர்சித்தவர்கள், இன்று அதைவிட மேம்பட்ட வருவாய் ஈட்டும் செயல்திட்டம் என்ன என்பதை இந்த அவையில் விளக்கவே இல்லை.

அதுமட்டுமல்ல, ஒன்றிய அரசிடமிருந்து தமிழ்நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய நிதிப் பகிர்வு என்பது, நமது தமிழ்நாட்டின் உரிமை. நமது மக்கள் கட்டும் வரிப்பணத்திற்கான உரிய பங்கைத்தான் நாம் தொடர்ந்து கேட்கிறோம். நிதிப் பகிர்வும் அதிகாரப் பகிர்வும் தி.மு.க. தொடர்ந்து முன்வைத்து வரும் உயிர்க்கொள்கைகள். அதனைத்தான் "மாநிலத்தில் சுயாட்சி; மத்தியில் கூட்டாட்சி" என்றுஐம்பெரும்முழக்கங்களில் ஒன்றாக வடித்துத் தந்தார் தலைவர் கலைஞர்.

இந்தக் கொள்கையைப் பேரறிஞர் அண்ணா நம்முன் விதைத்தார்; முத்தமிழறிஞர் கலைஞர் ஆழமாக வளர்த்தார்; திராவிட நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அதற்காக சமரசமின்றித் தொடர்ந்து போராடுகிறார்.

### வருவாய் மதிப்பீட்டின் நம்பகத்தன்மை குறித்து கேள்வி எழுகிறது!

மாநிலத்திற்குரிய நிதிப் பகிர்வு கிடைக்க வேண்டும் என்று எங்களது தலைவர் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறார்.

ஆனால், இந்த நிதிப் பகிர்வு போதுமானதாக இல்லை என்ற உண்மையைக் கூட இந்த அரசின் நிதிநிலை அறிக்கை சுட்டிக்காட்டவில்லை.

மொத்த வருவாய் உயர்வு மாநிலத்தின் முயற்சியால் அல்ல; ஒன்றிய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படும் கூடுதல் மானியங்களால் ஏற்பட்டுள்ளது. அந்த மானியங்களும், முந்தைய தி.மு.க. அரசு தொடர்ந்து வலியுறுத்தி, போராடிப் பெற்ற தமிழ்நாட்டின் உரிமைத் தொகைகளே என்பதை அழுத்தமாகப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையின் வருவாய் மதிப்பீடுகளில்கூட நம்பகத்தன்மை குறித்த கேள்விகள் எழுகின்றன.

மாநிலத்தின் சொந்த வருவாய் சுமார் 10.5 சதவீதம் உயரும் என்று அரசு கணித்துள்ளது. ஆனால், மாநிலப் பொருளாதாரம் பெயரளவில் 14 சதவீதம் வளரும் என்று அதே அரசு கூறுகிறது. பொருளாதார வளர்ச்சியைவிடக் குறைவாகவே சொந்த வருவாய் வளரும் என்று அரசு கணிப்பது, வருவாய் ஈட்டும் திறனில் ஏற்பட்டுள்ள மந்தநிலையையே காட்டுகிறது.

மேலும், கடந்த ஆண்டில் இருந்த 17.4 சதவீத வருவாய் வளர்ச்சியைவிட இந்த ஆண்டின் கணிப்பு குறைவாக உள்ளது. எனவே, இந்த வருவாய் மதிப்பீடுகளின் நம்பகத்தன்மை பற்றியே சந்தேகம் எழுகிறது. வருவாயின் அடிப்படைக் கணிப்பிலேயே தெளிவின்மை இருக்கும்போது, இந்த நிதிநிலை அறிக்கையின் பிற மதிப்பீடுகளின் மீதும் இயல்பாகவே ஐயம் எழுகிறது. எதிர்கால வளர்ச்சிக்கான மூலதன முதலீடுகள் குறைக்கப்பட்டிருப்பதும் கவலையளிக்கிறது.

### செயலாக்கத்திற்கான முதலீடு குறைவு!

ஆறுகள் இணைப்பு, மெட்ரோ விரிவாக்கம், ஏ.ஐ. நகரம், தொழிற்பூங்காக்கள் எனப் பல அறிவிப்புகள் வெளியிடப்பட்டிருந்தாலும், மூலதனச் செலவினம் ரூ.2,577 கோடி குறைக்கப்பட்டுள்ளது. அறிவிப்புகள் அதிகம்; ஆனால் செயலாக்கத்திற்கான முதலீடு குறைவு என்பதே இந்த நிதிநிலை அறிக்கையின் உண்மை முகம்.

மூலதன முதலீட்டுச் செலவுகள் குறைக்கப்பட்டிருக்கும்போது, அரசு ஏன் அதிகமாகக் கடன் வாங்குகிறது என்ற கேள்வியும் தவிர்க்க முடியாததாக இருக்கிறது.

தி.மு.க. உருவாக்கிய நிதி ஒழுங்கின் பலனை மட்டுமே தற்போதைய அரசு பயன்படுத்தியுள்ளது.

நிதிப் பற்றாக்குறை 3 சதவீதம் என்ற இலக்கைத் தக்கவைத்திருப்பதற்குக் காரணம் புதிய வருவாய் ஈட்டும் முயற்சிகள் அல்ல; ஒன்றிய அரசின் மானியங்களும், மூலதனச் செலவினக் குறைப்பும்தான். வருவாய்ப் பற்றாக்குறையும் அதிகரித்துள்ளது.

இடைக்கால நிதிநிலை அறிக்கையில் இருந்ததைவிட வருவாய்ப் பற்றாக் குறை சுமார் 6,778 கோடி ரூபாய் உயர்ந்துள்ளது. இதை நிதி முன்னேற்றம் என்று கூற முடியாது. கடன் சுமையும் அதிகரித்துள்ளது.

மாநிலத்தின் சொந்த வருவாய் ஈட்டும் முயற்சி குறைந்த நிலையிலும், பொதுக் கடன் பெறும் அளவு உயர்த்தப்பட்டுள்ளது.

### தி.மு.க. அரசின் நிநிலை அறிக்கை வருவாய் வளர்ச்சியை மையமாகக் கொண்டது!

மொத்தத்தில், கடந்த தி.மு.க. அரசின் இடைக்கால நிதிநிலை அறிக்கை உற்பத்தி, முதலீடு, வருவாய் வளர்ச்சி ஆகியவற்றை மையமாகக் கொண்ட தொலைநோக்குப் பார்வையுள்ள நிதித் திட்டமாக இருந்தது.

ஆனால், தற்போதைய அரசின் திருத்திய நிதிநிலை அறிக்கை, சொந்த வருவாயை உயர்த்தும் வாய்ப்பைக் கோட்டைவிட்டு, மூலதன முதலீட்டைக் குறைத்து, ஒன்றிய அரசின் மானியங்களை அதிகம் சார்ந்திருக்கும் நிலைக்குத் தமிழ்நாட்டைத் தள்ளியுள்ளது.

ஒற்றை வரியில் சொல்ல வேண்டுமென்றால், தி.மு.க. உருவாக்கிய வலுவான நிதி அடித்தளத்தின் மீது நிற்கும் இந்த அரசு, தமிழ்நாட்டின் எதிர்காலத்திற்கான புதிய நிதி அடித்தளத்தை அமைக்கத் தவறியுள்ளது.

உள்ளதை உள்ளபடி சொல்லும் என்னுடைய கருத்துகளை ஆளும் தரப்பில் உள்ளவர்களில் சிலரது மனம் ஏற்றுக் கொள்ளாமல் போகலாம். பலரது மனம் ஏற்றுக்கொண்டாலும் அதை வெளிப்படுத்த தயங்கலாம். இருக்கவே இருக்கிறது, எங்களைத் தற்காத்துக் கொள்ளும் வாதம் என, ஆட்சிப் பொறுப்பில் உள்ள ஆளும்கட்சியினர் இங்கே ஒரு வாதத்தை வைக்கக்கூடும்...

நாங்கள் வந்து நூறு நாட்கள்கூட ஆகவில்லையே என்று அவர்கள் சொல்லக்கூடும். எங்களுக்குக் கால அவகாசம் கொடுங்கள் என்று கேட்கக்கூடும். அவர்களின் கோரிக்கையை நான் எதிர்க்கவில்லை. ஆனால், உள்ளதை உள்ளபடி சொல்ல வேண்டுமல்லவா? ஒரு செயலை ஒருவர் செய்ய வேண்டுமானால், முதலில் அவரிடம் அதற்கான முனைப்பு இருக்க வேண்டும்.

### ஆளும் அரசின் தேர்தல் அறிக்கையை நிறைவேற்றும் அறிகுறி இல்லை!

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, ஆளுநர் உரை நிகழ்ந்துவிட்டது. நிதிநிலை அறிக்கை தாக்கலாகிவிட்டது. வேளாண் நிதிநிலை அறிக்கை வாசித்தாகிவிட்டது. ஆனால், இவற்றில் எங்காவது ஆளும் அரசின் தேர்தல் அறிக்கைகளை நிறைவேற்றுவதற்கான அறிகுறிகள் தென்படுகிறதா?

திராவிட மாடல் திட்டங்களின் விரிவாக்கம்தானே எங்கும் இருக்கிறது! இதனை யார் ஏற்கமறுத்தாலும், இது தான் மக்கள் காணும் உண்மை.

திராவிட மாடலின் திட்டங்களைக் கடக்க முடியாது; மக்கள் நலனில் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினை விஞ்சி யாரும் சிந்திக்க முடியாது என்பதுதான், இந்த நிதிநிலை அறிக்கைகள் புலப்படுத்தும் உண்மை!

திக்கெட்டும் ஒளிவீசும் திராவிட மாடல் திட்டங்களின் மறுபதிப்புதான், இந்த அரசின் முதல் பட்ஜெட்!

### காவிரிப் பிரச்சினைக்கு நீண்ட நெடிய வரலாறு!

தமிழ்நாடு எத்தனையோ பிரச்சினைகளைச் சந்தித்திருக்கிறது. அவற்றில் காவிரி பிரச்சினைக்கு, அந்த நதி போலவே நீண்ட நெடிய வரலாறு இருக்கிறது.

பல முதலமைச்சர்கள் இப்பிரச்சினையில் பேசியிருக்கிறார்கள். பல பொதுப்பணித்துறை அமைச்சர்கள் பேசியிருக்கிறார்கள். ஆனால் பேச்சுவார்த்தை எல்லாமே கானல் நீரான நிலையில் தான் கர்நாடகம் எதற்குமே அசைந்து கொடுக்காத நிலையில்தான் நாம் நீதி மன்றங்களின் உதவியை நாடியிருக்கிறோம்.

முதலில் அண்டை மாநிலம், அன்போடு பேச வேண்டும். இரு மாநில மக்களும் சுமுகமான சூழ்நிலையில் இப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என முழு முயற்சி மேற்கொண்டது திராவிட முன்னேற்றக் கழகம்தான்.

இங்கே கூட முதலமைச்சர் அவர்கள் பேசும் போது 1969 என்று ஒரு ஆண்டை நினைவுபடுத்தினார். அந்த ஆண்டில் இருந்த கலைஞர் பிறந்த அதே 1924ஆம் ஆண்டில்தான் இந்த காவிரி ஒப்பந்தமும் போடப்பட்டது. இப்பிரச்சினையில், முதலில் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த அவர்தான் காவிரிப் பிரச்சினை குறித்து அப்போதைய கர்நாடக முதலமைச்சர் வீரேந்திர பாட்டீலுடன் பேச்சுவார்த்தையைத் துவங்கியவர் என்பதை இந்த அவையிலே ஆழமாகப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இப்படி எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஆகியோரும் நேரடியாக கர்நாடகாவுடன் பேசினார்கள். பிறகு உச்சநீதிமன்றமே உத்தரவிட்டும் பேசினார்கள். ஆனால் தமிழ்நாட்டின் நீர் உரிமையை, நம் விவசாயிகளின் உரிமையைப் பற்றி கர்நாடக அரசு ஒரு சுமுகமான மன நிலையில் பேச முன்வராத காரணத்தால் தான், நாம் "பேச்சுவார்த்தை" என்பதை விட்டு, நடுவர் மன்றம், உச்சநீதிமன்றம் என்று நாடத் தொடங்கினோம்.

இடைக்காலத் தீர்ப்பையும் பெற்றோம். அதைச் செயல்படுத்த பிரதமர் தலைமையிலான ஆணையத்தையும் பெற்றோம். பிறகு நடுநர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பையும் பெற்றோம். அதை உச்சநீதிமன்றமே உறுதிசெய்து, தீர்ப்பைச் செயல்படுத்த ஒரு திட்டத்தையும் பெற்றோம். அத்திட்டப்படி தண்ணீர் சிறந்து விட ஒரு அமைப்பையும் பெற்றோம்.

### சட்டப்படி கிடைத்த உரிமையை பேச்சுவார்த்தை என்று கோட்டை விடக்கூடாது!

அப்படி பெறப்பட்ட அமைப்புதான் தற்போது இருக்கின்ற காவிரி மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு.

இப்போது நம்மிடம் இருக்கும் காவிரி உரிமை சட்டப்படியான உச்சநீதிமன்றத்தால் உறுதியும் இறுதியும் செய்யப்பட்ட உரிமை. நானும் பொதுப்பணித்துறை அமைச்சராக, முதலமைச்சராக இருந்து காவிரிப் பிரச்சினையில் தொடர் நடவடிக்கைகளை எடுத்தவன் என்ற முறையில் இதனை உறுதியாகச் சொல்கிறேன்.

சட்டப்படி கிடைத்த உரிமையை நாம் இனியும் பேச்சுவார்த்தை என்ற ரீதியில் கோட்டை விட்டுவிடக் கூடாது. முதலமைச்சர் அவர்கள் கூட "பகை நாடுகளே பேசுகின்றன. நாம் பேசினால் என்ன" என்றார்.

தமிழ்நாடு எப்போதுமே கர்நாடகா மாநிலத்தை "பகை மாநிலமாக" கருதியதில்லை. அவர்களும் நம்மைப் போல்தான் இருப்பார்கள் என்றே நம்பியிருந்தோம்.

தொடர்ச்சி 6ஆம் பக்கம்

---



**திராவிட மாடல் திட்டங்களின் விரிவாக்கம்தானே எங்கும் இருக்கிறது! இதனை யார் ஏற்க மறுத்தாலும், இதுதான் மக்கள் காணும் உண்மை.**

**திராவிட மாடலின் திட்டங்களைக் கடக்க முடியாது; மக்கள் நலனில் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினை விஞ்சி யாரும் சிந்திக்க முடியாது என்பதுதான், இந்த நிதி நிலை அறிக்கைகள் புலப்படுத்தும் உண்மை!**

**திக்கெட்டும் ஒளிவீசும் திராவிட மாடல் திட்டங்களின் மறுபதிப்புதான், இந்த அரசின் முதல் பட்ஜெட்!**

## மக்கள் நலனில் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினை விஞ்சி யாரும் நிற்க முடியாது!